بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## இடம் : நகோயா, ஜப்பான்

November 8 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் ஏறக்குறைய 7 வருடங்களுக்குப் பிறகு எனக்கு ஜப்பான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நேரடியாக பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் உலகிலுள்ள மற்ற ஜமாஅத்துகளைப் போன்றே ஜப்பான் அஹ்மதிய்யா ஜமாஅத்தும் முன்னேறிச் செல்கின்ற, முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கின்ற ஜமாஅத்துகளில் ஒன்றாகும். மனத்தூய்மையிலும், பற்றிலும், பொருள் தியாகத்திலும் முன்னேறுகின்ற ஜமாஅத்துகளில் ஒன்றாக அது இருக்கின்றது.

ஆனால் ஜமாஅத்திலுள்ள நபர்கள் இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களது உள்ளத்தில் ஒருபோதும் இந்த எண்ணம் வரக்கூடாது. அதாவது நாம் முன்னேற்றத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றோம். நமது எண்ணிக்கையும் சிறிதளவு அதிகமாகி இருக்கின்றது. நமது பொருள் தியாகமும் அதிகமாகி இருக்கின்றது. நாம் ஒரு புதிய இடத்தை வாங்கியுள்ளோம். இது அங்கு நமது தேவைகளை நிறைவு செய்வதற்கு பல வருடங்களுக்குப் போதுமானதாகும். இறைவணக்கத்துடன் சேர்த்து அதை தவிர ஏனைய நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்காகத்தான் நாம் இந்த புதிய இடத்தை வாங்கியுள்ளோம் என்ற எண்ணம் ஒருபோதும் உங்கள் உள்ளத்தில் வரக்கூடாது. நீங்கள் வாங்கியுள்ள இந்த புதிய தலைமையகம் தொடர்பான விபரங்களை பிறகு நான் எடுத்துக் கூறுவேன். ஆனால் இங்கு நான் எடுத்துக்கூட விரும்புவது இந்த புதிய விரிவான இடம் தொழுகைகளை நீங்கள் நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இருக்கின்றது. இப்போதுள்ள ஜமாஅத்தின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும் போது சிறிது காலம் வரை மாநாடுகளை நடத்துவதற்குக் கூட இந்த இடம் போதுமானதாக இருக்கும். அலுவலகங்களுக்கான இடமும் உங்களுக்கு கிடைத்து விடும். Guest House, Mission House மற்றும் ஏனைய வசதிகளும் உங்களுக்கு கிடைத்து விடும்.

ஜப்பான் அஹ்மதிய்யா ஜமாஅத் இதை வாங்குவதற்காக பெருமளவில் பொருள் தியாகம் செய்துள்ளது. பொருள் தியாகம் செய்வதற்கான உரிமையை அது செலுத்தியுள்ளது. ஆனால் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை செய்யும்படி கூறியுள்ள அந்த விசயங்களைப் புரிந்து அதற்கேற்ப செயல்படும் போதுதான் நாம் இதற்கான உண்மையான உரிமையை செலுத்தியவர்களாக ஆவோம். அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நாம் இந்த விசயங்களைப் புரிந்து அவற்றை செயல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இது ஓர் உண்மையான முஸ்லிமுக்கு அவசியமானதாகும்.

தற்காலிக உணர்வின் அடிப்படையில் சில தியாகங்கள், சில செயல்கள் இருந்தாலும் சில நேரங்களில் அவை கூட நன்மைகளைச் செய்வதற்கான விருப்பத்தை ஏற்படுத்த காரணமாக அமைகின்றது. அவை அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்யப்பட்டவையாக இருந்தால், அவை இறை விருப்பத்தைப் பெற்றுத் தரக்கூடியதாகவும் அதனை சேகரிக்கக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தில் இணைந்துள்ளவர்களாக நம்மைப் பற்றி கூறுகின்ற நாம் நிரந்தரமாக திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்யும்போது தான் உண்மையான முறையில் அதன் குறிக்கோளை அடைய முடியும். அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதன் நோக்கத்தை நம் கண் முன்னால் வைத்து செயல்படும் போதுதான் இதை அடைய முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ள *அருட்கொடைகளைப் பெற்றுள்ள மக்களிடம்* உள்ள சிறப்புகளைப் பெறுவதுதான் ஒவ்வொரு மனிதனுடைய உண்மையான நோக்கமாகும். நம்முடைய ஜமாஅத்திற்கு குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை நிறுவியதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தயார் செய்த ஜமாஅத் போன்ற ஒரு ஜமாஅத்தை தயார் செய்யவே அவன் விரும்பியுள்ளான். அதன் மூலம் இந்த இறுதிக் காலத்தில் இந்த ஜமாஅத் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை, மகிமை ஆகியவற்றிற்குச் சாட்சியாகத் திகழ வேண்டும். எனவே இது மிகப்பெரும் பொறுப்பாகும். இந்த பொறுப்பை நம்மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுமத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஜமாஅத் எந்த குறிக்கோள்களை அடைந்தார்களோ அல்லது அவற்றைப் பெற முயற்சி செய்தார்களோ அவற்றை நாமும் பெற வேண்டும். அவர்கள் தொடர்ந்து தமது உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்தனர். அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை அவனுக்கு அஞ்சியவாறு செலுத்தி வந்தனர். அல்லாஹ்வின் முன்பு அச்சத்துடன் துஆக்கள் செய்து வந்தனர். எந்தவொரு தியாகத்தின் மீதும் அவர்கள் பெருமைப்படவில்லை. மாறாக இவற்றை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று துஆ செய்து வந்தனர். அவர்கள் தங்களது இறைவணக்கத்தன் தரத்தை எந்த அளவு உயர்த்தினர் என்றால் தங்களது இரவுகளையும் இறை வணக்கத்தின் மூலம் அவர்கள் உயிருடன் வைத்திருந்தனர். அவர்களுக்கு உலக வியாபாரங்களும், தொழில்களும் இருந்தும் கூட இறைவனை நினைவு கூறுவதிலிருந்தும் கவனமற்ற நிலையில் அவர்கள் தமது பகல்களைக் கழிக்கவில்லை.

ஆக, இந்த குறிக்கோள்களைத் தான் நம்மில் ஒவ்வொருவரும் பெற வேண்டியது அவசியமானதாகும். இந்த நோக்கம் தொடர்பாகத்தான் அல்லாஹ் திருக்குர்ஆனில் நீங்கள் இந்த நோக்கத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள் என்று கூறுகின்றான். ஏனென்றால் மனிதனின் பிறப்பின் நோக்கம் அல்லாஹ்வை வணங்குவதாகும். நாம் பள்ளிவாசல்களைக் கட்டும் போது அல்லது கூட்டாக இறைவணக்கம் செய்வதற்காக ஓரிடத்தை வாங்கும்போது இந்த நோக்கம்தான் நம் கண் முன்னால் இருக்க வேண்டும். அதாவது நாம் தொடர்ந்து செயல்பட்டவாறு நமது பிறப்பின் நோக்கத்தை அடைவதன் உயர்வான தகுதியை அடைய வேண்டும். உலகில் சில நோக்கங்களை அடைவதற்கு சில எல்லைகள் உள்ளன. இவ்விசயத்தில் குறிப்பிட்ட அளவு மனிதன் உயர்வை அடைந்த பிறகு, நான் எனது குறிக்கோளை அடைந்து விட்டேன் என்று மகிழ்ச்சி அடைகின்றான். அல்லது இந்த உலகிலேயே அதன் விளைவுகளை அவன் பெற்றுக் கொள்கின்றான்.

ஆனால் அல்லாஹ்வின் அடியானாக இருப்பது அவனை வணங்குவது ஆகியவற்றின் நோக்கம் எத்தகையதென்றால் அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தின் புதிய புதிய கதவுகள் திறந்து கொண்டே இருக்கின்றது. பிறகு மரணித்த பிறகும் கூட இந்த உலகில் செய்த செயல்களுக்கு மறுவுலகில் நற்கூலி கிடைக்கின்றது. அதில் அல்லாஹ்வின் எல்லையற்ற கருணை மற்றும் அருளுக்கு ஏற்ப முன்னேற்றம் கிடைப்பது சாத்தியமானதாகும். அந்த முன்னேற்றம் கிடைத்துக் கொண்டே இருக்கும். அதன் மூலம் எத்தகைய அருட்கொடைகளுக்கு மனிதன் வாரிசாகி விடுகின்றான் என்றால் அது அவனது சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். சஹாபாக்கள் ரிழ்வானுல்லாஹி அலைஹிம் இந்த விசயத்தை கண்முன் நிறுத்தியவாறு முன்னேற்றத்தின் இலக்குகளைக் கடந்து சென்றனர். மேலும் ரலியல்லாஹு அன்ஹு (அல்லாஹ் அவர்களுடன் திருப்தி அடைந்தான்) என்ற கண்ணியத்தைப் பெற்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது ஜமாஅத்திலுள்ள நபர்களை இவ்வாறே முன்னேற்றத்தின் இலக்குகளை அவர்கள் கடந்து செல்ல வேண்டும் என்று விரும்புகின்றேன். அதன் மூலம் அவர்கள் தமது பிறப்பின் நோக்கத்தை நிறைவு செய்து பின்னர் அதன் தகுதிகளில் அவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டும். அவர்களது தகுதி உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். மேலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெறுபவர்களாக அவர்கள் ஆக வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்திலுள்ள நபர்கள் எத்தகையவர்களாக இருக்க வேண்டும் என்றால் அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமை ஆகியவற்றிற்கு சாட்சிகளாகத் திகழ வேண்டும்.

என்ன? அல்லாஹ்வின் இறுதியான முழுமையான வேதமாக இருக்கின்ற திருக்குர்ஆனின் மகிமை நமது சாட்சி மூலம்தான் நிரூபிக்கப்படுமா? அல்லாஹ்வின் இறுதி நபியாகவும் எல்லாரையும் விட அல்லாஹ்வுக்கு மிகவும் நேசத்திற்குரிய தூதராகவும், காத்தமுல் அன்பியாவாகவும் இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமையை நிரூபிப்பதற்கு நமது ஏதாவதொரு செயல் தேவைப்படுகிறதா? இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இங்கு என்ன கூற விரும்புகின்றார்கள் என்றால், திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரிக்கு ஏற்பவும் நடப்பதன் மூலமாக நமது செயல்களில் ஒரு புரட்சி தோன்ற வேண்டும். அந்த புரட்சி எவ்வாறு வெளிப்பட வேண்டும் என்றால் உலகம் இவர்களைப் பார்த்து திருக்குர்ஆனின் அழகிய போதனைகளுக்கு ஏற்பவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறைக்கு ஏற்பவும் செயல்பட்டதன் மூலமாகவே இந்த புரட்சி இவர்களது வாழ்நாளில் வந்துள்ளது என்று கூற வேண்டும். இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் இறைவணக்கத்தின் உயர்வான தரத்தைப் பெற்றதன் மூலம் இறைவனுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக இருக்கின்றனர். எல்லா விதமான நல்லொழுக்கத்தின் உயர்வான நல்லுதாரணத்தை நிலைநாட்டுவதன் மூலம் இறை அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர் என்று அவர்கள் கூற வேண்டும்.

எனக்கு கிடைத்துள்ள அறிக்கையில் இந்த விசயம் கூறப்பட்டுள்ளது. நமது முஸ்லிம் அல்லாத ஜப்பானிய நண்பர் ஒருவர் இப்போது வாங்கப்பட்டுள்ள புதிய இடத்தை நாம் வாங்க முற்பட்ட போது பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட தடைகளை நீக்குவதில் எவ்வித சுய பலனையும் எதிர்பார்க்காமல் நமக்கு உதவி செய்துள்ளார். இதற்கு மஸ்ஜிது பைத்துல் அஹது என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அது முழுமையடையும் கட்டத்தில் உள்ளது. இந்த இடத்தை வாங்குவதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னென்ன தடைகள் ஏற்பட்டு வந்ததோ அவற்றை அகற்றுவதில் இந்த நண்பர் எவ்வித சுயபலனையும் எதிர்பார்க்காமல் நமக்கு உதவி செய்துள்ளார். அதற்கு காரணம் பூகம்பங்களின் போதும் சுனாமி வந்த சமயத்திலும் ஜமாஅத் இறை அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தியவாறு செய்த தொண்டுகளேயாகும். அந்த பணிகளுக்கு அவரது பார்வையில் பெரும் முக்கியத்துவம் இருந்தது. ஜப்பானிய மக்களுக்கு ஜமாஅத் பேருபகாரம் செய்துள்ளது என்று அவர் கூறினார். எனவே நான் இந்தப் பணியை எவ்வித கூலியையும் இதற்காக பெறாமல் செய்வேன் என்று அவர் கூறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் ஜமாஅத் எந்தப் பணியைச் செய்திருந்தாலும் மற்றவர்கள் மீது தமது பேருபகாரத்தை வெளிப்படுத்தும் முகமாக அதை செய்வதில்லை. மாறாக அது தமது கடமையைச் செய்துள்ளது. அவ்வாறு செய்யவும் வேண்டும். ஏதாவதொரு இடத்தில் எவர் எந்த துன்பத்தில் இருப்பதைப் பார்த்தாலும் உதவி செய்ய வேண்டும். ஆனால் எவ்வாறிருப்பினும், அவர் தமது உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். ஜமாஅத்தின் இந்த சிறிய தொண்டினைப் பாராட்டிக் கூறியவாறு அவர் ஜமாஅத்திற்கு அருகில் வந்துள்ளார். ஆக, இறை அடியார்களுக்கு செலுத்தப்படும் இந்த உரிமைகள் தொடர்பான இந்தப் பணியை நாம் செய்து கொண்டே செல்ல வேண்டும். அவை நமக்கு பயன்களைத் தந்தாலும் தராவிட்டாலும் அவற்றைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இதுதான் இறை அடியார்களுக்கு நாம் செலுத்தும் உரிமைகளாகும். இதுதான் திருக்குர்ஆனின் போதனையாகும். இதுதான் நமது தூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரியாகும். படைப்பினங்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று எங்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்று நாம் கூறும்போது நமது அறிமுகத்தில் மேலும் விரிவான நிலை ஏற்படும். இந்த ஜப்பானிய வழக்கறிஞரைப் போன்று இன்னும் பல மக்கள் இதற்காக முன்வருவர். அவர்கள் ஜமாஅத்தின் தொண்டுகளைப் பாராட்டுவர். அவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பிரகாசமாகத் தெரிந்து விடும். இஸ்லாம் பற்றிய அறிமுகம் வளர்ச்சி அடையும். இஸ்லாமிய போதனைகளின் மகிமை அவர்கள் மீது நிலை நிற்கும். மேலும் இவ்வாறு தப்லீகிற்காக இன்னும் பல வழிகள் திறக்கும்.

மஸ்ஜிது பைத்துல் அஹது தொடர்பாக நான் ஏற்கனவே கூறியிருந்தபடி இந்தப் பள்ளிவாசலுடன் தொடர்புடைய மிகச் சாதாரணமான சில சட்ட ரீதியான எதிர்பார்ப்புகளை நாம் நிறைவு செய்ய வேண்டியதுள்ளது. அவற்றை நிறைவு செய்த பிறகு பள்ளிவாசலின் வடிவமும் இதற்கு வழங்கப்படும். இதன் மூலம் ஜமாஅத் பற்றி மேலும் அதிகமாக அறிமுகம் ஏற்படும். திருக்குர்ஆனின் போதனையை மேலும் அறிமுகம் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கேற்ப அது நடக்கும். இந்த மக்களுக்கும் இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், இவர்கள் நல்லியல்பு கொண்டவர்களாக இருக்கின்றனர். இந்த மக்கள் நல்லியல்பு கொண்டவர்களாக இருப்பதன் காரணத்தால் இவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, இவர்களுக்கு இஸ்லாத்தை அறிமுகம் செய்து வைக்க முயற்சி செய்ய வேண்டும். இதற்காக இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் வகையில் ஜப்பானிய மொழியில் ஒரு நூல் எழுதப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். எவ்வாறிருப்பினும் இந்த நூலைத் தயார் செய்வதற்கான பணியும் நடந்து வருகிறது. இந்த எல்லா விசயங்களும் இங்கு வசிக்கின்ற உங்களுக்கு – அதாவது உங்களில் பெரும்பாலார் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாகவும் பழைய அஹ்மதிகளாகவும் இருக்கின்றீர்கள். நீங்கள் உங்களது செயல்களின் நிலைமையப் பற்றி பார்க்க வேண்டும். இப்போது முன்பை விட அதிகமாக மக்கள் உங்கள் பக்கம் பார்ப்பார்கள். நீங்கள் தப்லீக் செய்யும் போது, இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கும் போது மக்கள் உங்களது செயலின் நிலையைப் பார்ப்பார்கள். நீங்கள் இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்காக என்ன தியாகங்களைச் செய்தீர்கள் என்பதை இந்த மக்கள் பார்க்க மாட்டார்கள். உங்களது செயலின் நிலை எப்படி இருக்கின்றது? உங்களுக்கு இறைவனுடன் எப்படிப்பட்ட உயிருள்ள தொடர்பு இருக்கின்றது? உங்களுடன் வந்து சேர்வதால் அம்மக்களிடம் என்ன புரட்சி ஏற்படும்? என்பதைத்தான் அவர்கள் பார்ப்பார்கள். உலக அளவில் பார்க்கும் போது இம்மக்கள் உங்களை விட மிகவும் முன்னேறிச் சென்று விட்டனர். இவர்களது வெளிப்படையான ஒழுக்கமும் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. ஏதாவதொரு புது விசயத்தை இவர்களுக்கு கொடுக்க முடியுமென்றால் அது இறைவனோடு இவர்கள் தொடர்பு கொள்வதற்கான வழிமுறைகளை நாம் இவர்களுக்கு கற்றுக் கொடுப்பதேயாகும்.

இப்போது இஸ்லாம் மட்டுமே உயிருள்ள மார்க்கமாகும் என்பதை நாம் இவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். இறைவனை வணங்குவதற்குரிய உரிமையை எப்படி செலுத்த வேண்டும் என்பதை நாம் இவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். இறைவன் துஆக்களை எப்படிக் கேட்கின்றான்? என்பதை நாம் இவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். இறைவன் தன்னுடைய அடியார்களிடம் எப்படிப் பேசுகின்றான் என்பதை நாம் இவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். ஆனால் இவற்றையெல்லாம் செய்வதற்கு நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இறைவனுடன் நமது தொடர்பை வலுப்படுத்த வேண்டும். நமது தொழுகைகளைப் பாதுகாக்க வேண்டும். நமது இறை வணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். நம்மில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்பாகவும் நேசத்துடனும் இருக்க வேண்டும். ஜப்பானிய சமுதாயத்தின் ஒழுக்கத்தை விட சிறப்பாக இருக்கின்ற நல்லொழுக்கத்தின் மிக உயர்ந்த தரத்தை நாம் பெற வேண்டும். வெளிப்படையான ஒழுக்கத்தைப் பொறுத்தவரையில் இவர்களிடம் பல நல்ல விசயங்கள் இருக்கின்றன. மனிதர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் இவர்களிடம் இருக்கின்றது. ஒருவர் செய்த நன்மைக்குப் பகரமாக அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற இஸ்லாமிய போதனைக்கேற்பவும் இவர்கள் செயல்படுகின்றனர். எனவே தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த மக்களிடம் ஏற்பட்டுள்ள இந்த கவனம் இவர்களது ஏதாவதொரு நல்லியல்பின் காரணமாகவே ஆகும் என்று கூறியுள்ளார்கள். எனவே இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் தொடர்பாக இவர்களுக்கு தெரிவிப்பது மிகவும் அவசியமானதாகும்.

எனவே இந்த மக்களிடம் இருக்கும் இந்த நல்லியல்பிலிருந்தும் முழுமையாகப் பயனடைய வேண்டும். இவர்களிடம் இருக்கும் நல்லொழுக்கத்திலிருந்தும் முழுமையாகப் பயனடைய வேண்டும். இதற்காக நாம் இஸ்லாத்தின் அழகை அவர்களுக்கு காட்ட வேண்டும். இறைவனுக்கு அவனது அடியானுடன் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகின்ற செயல் அளவிலான முன்மாதிரியை அவர்களுக்கு காட்ட வேண்டும். இதற்காக இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் திருக்குர்ஆனின் போதனையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியையும் எல்லா சமயத்திலும் தனக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும்.இந்த விசயத்தைப் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கியுள்ள வழிகாட்டல்களை நீங்கள் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இவற்றிலிருந்து சில விசயங்களை நான் உங்கள் முன்பு வைக்கின்றேன்.

நாம் நம் கண் முன்னால் வைத்திருக்க வேண்டிய முதலாவது விசயம் அல்லாஹ் நாம் செய்துள்ள உடன்படிக்கைகள் தொடர்பாக நம்மிடம் கேட்பான் என்பதாகும். நீங்கள் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பாக அவன் உங்களிடம் கேட்பான். இந்தக் காலத்தில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். நாம் பைஅத் செய்து விட்டோம். அஹ்மதிகளாகி விட்டோம் என்பது மட்டும் போதுமானதல்ல. பழைய அஹ்மதிகள் கிலாஃபத்தின் கையில் மீண்டும் தங்களது பைஅத்தைப் புதுப்பித்துக் கொண்டு அதுவே போதுமானது என்று கருதி இருந்து விட முடியாது. பைஅத்திற்கான உடன்படிக்கை ஒரு கோரிக்கையை நம்மிடம் வைக்கின்றது. அதனை பத்து பைஅத் நிபந்தனைகளின் வடிவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம் முன்னால் எடுத்து வைத்துள்ளார்கள். இதன் சுருக்கத்தை எடுத்துக் கூறுவதாக இருந்தால் அது இதுவாகும். அதாவது எல்லா நிலையிலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். நாம் எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் பைஅத்தில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்ற இந்த உறுதிமொழியை எடுக்கும்படி கூறியிருப்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். ஏனென்றால் இதன் மூலம் பைஅத் செய்திருப்பவர் இதற்கேற்ப எவ்வாறு செயல்படுகின்றார் என்பதை நான் பார்க்க முடியும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஏதாவதொரு உலகப் பணியைச் செய்ய வேண்டியது இருந்தால் அதற்காக நீங்கள் ஒரு பெரும் முயற்சி செய்கின்றீர்கள். அப்போதுதான் அதில் உங்களுக்கு வெற்றி கிடைக்கின்றது. ஆனால் மார்க்கத்திற்காக உழைக்க வேண்டும் என்ற வேதனை உங்களிடம் இல்லை. எதன் மூலம் எல்லா சமயமும் இறைவன் முன்னால் இருக்கும் நிலை ஏற்படுமோ அத்தகைய முயற்சி உங்களிடம் இல்லை. உங்களை நீங்களே அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்வதற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் முயற்சி செய்து உங்களிடம் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்தில் ஒரு தூய மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த துக்கமும் வேதனையும் இருக்கின்றது. எனது ஜமாஅத்திடம் ஏற்பட வேண்டிய மாற்றம் தொடர்பாக என்னுடைய உள்ளத்தில் என்ன வரைபடம் இருக்கின்றதோ அதற்கேற்றார் போல் உள்ள நிலைமை இப்போது உருவாகவில்லை. இந்த நிலைமையைப் பார்த்து எனது நிலை,

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

அதாவது *இவர்கள் ஏன் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகவில்லை என்பதற்காக ஒருவேளை நீர் உமது உயிரை மாய்த்துக் கொள்வீரா? (26:4)* என்ற நிலைக்கு ஒப்பானதாக இருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சில சொற்களை மட்டும் பைஅத்தின் போது கிளியைப் போன்று சொல்வதை நான் விரும்புவதில்லை. இதனால் எந்தப் பயனும் ஏற்படாது. நஃப்ஸை தூய்மைப்படுத்துவதற்கான அறிவைப் பெறுங்கள். இதற்கான தேவையே இருக்கின்றது. உங்களது நஃப்ஸை எப்படி தூய்மைப்படுத்துவது என்பதை அறிவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருவர் தன்னிடம் பைஅத் செய்த பிறகு அவர் தெரிந்திருக்க வேண்டிய அதன் உண்மையான நோக்கம் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

நீங்கள் உங்களிடம் ஒரு தூய மாற்றத்தை உருவாக்குங்கள். முற்றிலும் ஒரு புதிய மனிதனாக ஆகிவிடுங்கள். இதற்காக உங்களில் ஒவ்வொருவரும் இந்த இரகசியத்தைப் புரிவது அவசியமானதாகும். எத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் நான் வேறு ஒருவனாவேன் என்று அவரால் கூற முடிய வேண்டும். அதாவது முதலில் நான் எப்படி இருந்தேனோ இப்போது அவ்வாறு இல்லை என்பதை கூற முடிய வேண்டும்.

எனவே இந்த வேதனையை நாம் உணர வேண்டியது அவசியமானதாகும். இந்த சொற்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நட்பிலிருந்தும் பெரும் பலன்களைப் பெற்று வந்த அந்த மக்களிடம் கூறியுள்ளார்கள். அவர்களது தரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கேற்ப இல்லை என்றால் அதில் குறை இருந்தால் பிறகு நம்முடைய காலத்தில் இத்தகைய குறைகள் பல மடங்கு அதிகமாகி விட்டன. அவற்றை அகற்றுவதற்காக நாம் பல மடங்கு அதிகமாக முயற்சியும் செய்ய வேண்டும். அப்போது தான் நாம் அன்னாரின் வேதனையை இலகுவானதாக ஆக்குபவர்களாக ஆக முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுவே எனது நிலையாகும் என்று கூறியிருப்பது, நீங்கள் ஏன் மூஃமின்களாக ஆகவில்லை என்ற உங்களது இந்த நிலையைப் பார்த்து என்னை நான் அழித்துக் கொள்வேனா? என்று அவர்கள் கூறுவதன் பொருள் அந்நியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏன் நம்பிக்கை கொள்வதில்லை என்ற துக்கம் இருக்கத்தான் வேண்டும். ஆனால் இங்கு அவர்களுக்கு தம்மவர்களைப் பற்றிய கவலை இருக்கின்றது. ஒரு நம்பிக்கையாளருக்குத் தேவையான அந்த உயர் தகுதியை இவர்கள் ஏன் பெறவில்லை என்ற கவலை அவர்களுக்கு இருந்தது.

திருக்குர்ஆன் இவ்வாறு நம்பிக்கை கொள்பவர்கள் தொடர்பாக நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று வேண்டுமானால் கூறுங்கள். நாங்கள் கட்டுப்பட்டு நடக்கின்றோம். ஜமாஅத் அமைப்பில் இணைந்து விட்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்த வர வேண்டிய அந்த

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியும் வந்து விட்டார். நாங்கள் அவரிடம் பைஅத் செய்து அவரது ஜமாஅத்தில் இணைந்து விட்டோம் என்று வேண்டுமானால் கூறுங்கள். ஆனால் உங்களிடம் முழுமையான ஈமான் இப்போது உருவாகவில்லை. நம்பிக்கை கொள்வதற்கு பல நிபந்தனைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்றுவது அவசியமானதாகும். உதாரணமாக, ஒரு நம்பிக்கையாளர் எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் மீது நேசம் வைக்கின்றவராக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது நேசம் வைப்பது என்பதன் பொருள் என்னவென்றால், உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் உறவுக்கும் அல்லாஹ்வுக்கு எதிரில் எந்த முக்கியத்துவமும் வழங்கக் கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களில் ஈமானுடன் பொருத்தமான நற்செயல்களைச் செய்வதை நிபந்தனையாக ஆக்கியுள்ளான். அதாவது நன்மையான செயல்களைச் செய்ய வேண்டும். அது சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும் இடத்திற்கு ஏற்பவும் செய்யப்பட வேண்டும். இறைவனது திருப்தியைப் பெறுவதை கண்முன் நிறுத்தியவாறு அவை செய்யப்பட வேண்டும். அல்லாஹ் மூஃமின்களுக்கு இக்கட்டளையை இட்டுள்ளான். அதாவது இறைவனை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்துவதுடன் ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டிய அவசியமான விசயம் தொடர்பாக, மூஃமின்கள் யாரென்றால் அவர்கள் மக்கள் மத்தியில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துபவர்களாக இருப்பர் என்று இறைவன் கூறியுள்ளான். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவர்களில் ஒருவர் மற்றவரிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்வார்கள். அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தமாட்டார்கள். அவர்களது ஆலோசனை உலகின் நன்மையை ஏற்படுத்துவதற்காக இருக்கும். அது இழப்பை ஏற்படுத்துவதற்காக இருக்காது.

நம்பிக்கையாளர்கள் எப்படிப்பட்ட சமுதாயத்தினர் என்றால் அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமைகளிலிருந்து தடுக்கின்றனர். நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அவர்கள், அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள். உண்மையில் நிலைத்திருப்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். கவ்லே ஸதீது என்னும் நேர்மையான கூற்றைக் கூறுவதை எந்த அளவு முறைப்படி பேணுபவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்றால் எவ்வித கோணலான பேச்சும் அவர்களது நாவிலிருந்து வெளி வராது. தம்மவர்களுக்கு எதிராக சாட்சி கூற வேண்டியது வந்தாலும் அவர்கள் சாட்சி கூறுவார்கள். அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வால் நிரம்பி காணப்படுவார்கள்.

சஹாபாக்களில் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்வதில் எத்தகைய முன்மாதிரியைக் காட்டினார்கள் என்றால் அவர்கள் தமது செல்வத்தையும், வீட்டிலுள்ள பொருள்களையும், சொத்துக்களையும், சுருக்கமாகக் கூறுவதென்றால் ஒவ்வொரு பொருளையும் அவர்களில் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்வதற்கு தயாராக இருந்தனர். பிறகு நம்பிக்கையாளரிடம் இருக்கும் இன்னொரு அடையாளம் அவர்கள் நல்லெண்ணம் கொள்பவர்களாக திகழ்வர். எல்லா சமயத்திலும் அவர்கள் தப்பெண்ணம் கொள்வதில்லை. கேள்விப்பட்ட விசயங்களை உறுதியாக நம்பியவாறு அவர்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் தொடர்பாக தமது உள்ளத்தைக் காழ்ப்புணர்ச்சியாலும் வெறுப்புணர்வானலும் நிரப்பிக் கொள்வதில்லை. இந்த ஒரு விசயத்தை மட்டும் பேணியவாறு உங்களில் ஒவ்வொருவரும் இதற்கேற்ப 100 சதவீதம் செயல்பட ஆரம்பித்து விட்டால் இங்குள்ள ஒவ்வொரு ஜமாஅத் சகோதரரின் முன்னேற்றத்தின் வேகமும் பல மடங்கு அதிகமாக ஆக முடியும்.

நம்பிக்கையாளர்கள் தமது மனைவிமார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வர். இதுவும் கூட அல்லாஹ்வின் கட்டளையாகும். இங்கு ஜப்பானிய பெண்களை யார் திருமணம் செய்திருக்கின்றார்களோ அவர்களில் ஒவ்வொருவரும் இஸ்லாமிய போதனைக்கேற்ப தங்கள் மனைவிமார்களுடன் நல்ல முறையல் நடந்து கொள்பவர்களாக இருந்தால் இது அவர்களது மாமனார் குடும்பத்திலுள்ள உறவினர்கள் மத்தியில் தப்லீக் செய்வதற்குரிய வழியாக ஆகி விடும்.

பிறகு நம்பிக்கையாளர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது தவறுகளை மன்னிப்பவர்களாக இருப்பார்கள். கண்டும் காணாதது போன்று நடந்து கொள்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். பிறகு நம்பிக்கையாளர்கள் பணிவை மேற்கொள்பவராக இருப்பார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

*நீங்கள் பணிவை மேற்கொண்டால்,*
*ஒவ்வொருவரையும் விட கீழ்நிலையில் இருப்பவராக*
*உங்களை கருதினால் அல்லாஹ்வின் அன்பைப்*
*பெறக்கூடியவர்களாக நீங்கள் ஆக முடியும்.*

எனவே இறைவனின் நெருக்கத்தைப் பெற விரும்பினால் பணிவை மேற்கொள்வது நிபந்தனையாகும். தற்பெருமை கொள்வது இறைவனுக்கு விருப்பமானது அல்ல. பொறுப்பாளர்களும் தங்களது வட்டத்தில் பணிவை மேற்கொள்ள வேண்டும். ஜமாஅத் சகோதரர்களும் பணிவை மேற்கொள்ள வேண்டும். ஒரு மூஃமினின் இன்னொரு அடையாளம் அவர் கோபத்தை அடக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

உங்களது உடன்படிக்கைகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். நீங்கள் செய்த உடன்படிக்கை தொடர்பாக அல்லாஹ் உங்களிடம் கேட்பான். நாம் இந்த காலத்தில் செய்துள்ள பைஅத் உடன்படிக்கை தொடர்பாக அதை புரிவதும் அதற்கேற்ப செயல்படுவதும் அந்த உடன்படிக்கையைப் பேணுவதும் அதை நிறைவேற்றுவதும் அவசியமானதாகும். நாம் ஒவ்வொரு நன்மையான செயலையும் செய்யும் போதுதான் இதனை நாம் நிறைற்ற முடியும். உங்களது வாழ்க்கையை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப வடிவமைத்து கொள்வதன் மூலமே இதனை நிறைவேற்ற முடியும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தின் குறிக்கோளாக எதை கூறியுள்ளார்களோ அதற்கேற்ப செயல்படுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

நான் இப்போது அதிகமான விளக்கத்துடன் விரிவாக இந்த கட்டளைகளை எடுத்துக் கூற முடியாது. எண்ணற்ற கட்டளைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கேற்ப அவர் தமது வாழ்க்கையை கழிப்பவராக அவர் இருக்கின்றாரா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அவர்களது விருப்பத்தை நிறைவேற்றக் கூடியவராக அவர் இருக்கின்றாரா? அவரது ஒவ்வொரு செயலும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படுகிறதா? என்று அவர் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கவிதையை நான் கூறினேன். உங்களது எண்ணத்தில் நீங்கள் எல்லாரையும் விட கீழ்நிலையில் இருப்பவராக ஆகி விடுங்கள் என்ற போதனைக்கேற்ப இந்த நிலைமை நம்மில் ஒவ்வொருவரிடமும் ஏற்பட்டால் தான் நாம் பிறரை மன்னிக்கக் கற்றுக் கொள்வோம். தப்பெண்ணம் கொள்வதிலிருந்தும் தவிர்ந்திருப்போம். ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக பயனுள்ள ஒரு நபராக ஆவோம். எனவே ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வேதனையையும் கவலையையும் புரிந்து கொள்வது அவசியமானதாகும். இந்த விசயங்கள்தான் நஃப்ஸை தூய்மைப்படுத்துவதற்குக் காரணமாக அமையும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை உருவாக்குங்கள். ஒருவர் மற்றவரது குறையையும் தவறுகளையும் தேடுவதற்குப் பதிலாக ஒருவர் மற்றவரிடம் இருக்கும் சிறப்பான விசயங்களைத் தேட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களில் ஒவ்வொருவரும் பரஸ்பரம் உங்களுக்கிடையே இருந்து வரும் சண்டைகள், உணர்ச்சிவசப்படுவது, பகைமை ஆகியவற்றை அகற்றி விடுங்கள். இப்போது நீங்கள் மிகவும் சிறிய விசயங்களிலிருந்து முகம் திருப்பியவாறு முக்கியமான மகத்தான பணிகளில் ஈடுபட வேண்டிய நேரமாக இது இருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அல்லாஹ் கூறியுள்ள விசயங்களுக்கேற்ப செயல்பட்டால், மேலும் அவனது மார்க்கத்திற்கு உதவுவதற்கான முயற்சிகளைச் செய்வதில் ஈடுபட்டால் இறைவன் எல்லா தடைகளையும் அகற்றி விடுவான். நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்கள்.

எந்த உயர்வான விசயங்கள் தொடர்பாக அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளானோ அவை இவையாகும். அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்காக முயற்சி செய்ய வேண்டும். இந்த நேரத்தில் எந்த வெற்றியைப் பெறுவதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டுமோ அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதாகும். அவர்களது வருகையின் நோக்கம் அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதும் அவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்துவதுமாகும். இவ்வாறே படைப்பினங்களில் ஒருவருக்கு மற்றவர் மீதுள்ள உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனமூட்டுவதும் அதனை செயல்படுத்துவமாகும். நாம் முழுமையான நம்பிக்கையாளராக ஆவதற்கு முயற்சி செய்யும் போதுதான் இவையெல்லாம் நடக்க முடியும். அதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனையை ஒவ்வொரு இடம் வரை நாம் எட்ட வைக்க முடியும்.

எனவே மீண்டும் நான் கூறுகின்றேன். உங்களில் ஒவ்வொருவரும் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஜப்பானிலுள்ள ஜமாஅத் மிகச்சிறிய ஜமாஅத் ஆகும். இதில் ஒரு சிலர் கூட தங்களது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாட்டைக் கொண்டவர்களாக இருந்தால் இந்த விசயமாவது

ஒவ்வொருவரிடமும் அதன் தீய தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக இளைஞர்கள் மீதும் சிறுவர்கள் மீதும் இதனால் எத்தகைய தாக்கம் ஏற்படுகின்றதென்றால் அதன் விளைவாக அவர்கள் மார்க்கத்தை விட்டு தொலைவில் சென்று விடலாம். அஹ்மதிய்யத்திற்கு அருகில் வந்திருக்கும் ஜப்பானியர்கள் கூட அப்படிப்பட்ட விசயங்களைப் பார்த்து விட்டு உங்களை விட்டு அகன்று தொலைவில் சென்று விடலாம். எந்த ஜப்பானிய ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் அவர் அஹ்மதியை அல்லது அஹ்மதி பெண்ணை திருமணம் செய்த பிறகு அஹ்மதிய்யத்தை நெருங்கி வந்திருந்தால் அவர்களும் கூட இதனால் அதை விட்டு விலகி தொலைவில் சென்று விடலாம்.

எனவே, இது மிகவும் கவலைக்குரிய இடமாகும். முதலாவதாக, இதற்கு ஜமாஅத்தின் தலைவரும் பொறுப்புப் பிரச்சாரகரும் பொறுப்பாளிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு தந்தையாக இருந்து பணியாற்ற வேண்டும். அவர்களுக்கிடையில் தூய மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும். தங்களது பொறுப்பின் அடிப்படையிலும் தங்களுக்கு இருக்கும் அறிவின் அடிப்படையிலும் எல்லாரையும் விட அதிகமாக இவர்களுக்குத்தான் பொறுப்பு இருக்கின்றது. இது குறித்து அவர்களிடம் கேள்வி கேட்கப்படும். இதைப் பற்றி தெரியாதவர்களாக அவர்கள் இருந்தால் அல்லது இதைப் பற்றி குறைவான அறிவு தான் அவர்களுக்கு இருந்தது என்றல் அது வேறு விசயமாகும். ஆனால் எல்லாம் தெரிந்திருந்தும் பிறகு அதற்கேற்ப செயல்படாமல் இருந்தால் இது தொடர்பாக அதிகம் கேள்வி கேட்கப்படும். அதற்கு பதில் சொல்ல வேண்டும். ஜமாஅத் சகோதரர்களில் ஒவ்வொருவரும் தங்களைத் தாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பிறகு ஜமாஅத்தின் ஒவ்வொரு பொறுப்பாளரும் அவர் தனது பொறுப்பிற்கான உரிமையைச் செலுத்துகின்றாரா என்று ஆய்வு செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

இந்த உரிமையைச் செலுத்தாததன் காரணமாக அவர் ஜமாஅத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி விடவில்லையே என்பதை அவர் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இதற்கு பிறகு கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் உள்ளனர். அவர்களும் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஒவ்வொருவரிடமும் அவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவை தொடர்பாகவும் அவர் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பாகவும் எந்த அளவு இதனை நீங்கள் நிறைவேற்றியுள்ளீர்கள் என்று கேட்கப்படும். கூட்டங்களில், மாநாடுகளிலுள்ள நிகழ்ச்சிகள் ஜப்பானிய மொழியில் இருக்க வேண்டும். இது தொடர்பாகவும் எனக்கு சில புகார்கள் வந்துள்ளன. இங்குள்ள ஜப்பானியர் ஒரு சிலருக்கு இங்கு நடைபெறும் கூட்டங்களில் என்ன நடக்கின்றது? என்று எதுவுமே தெரிவதில்லை. எந்த ஆண்களுக்கோ பெண்களுக்கோ ஜப்பானிய மொழி நன்றாக புரிவதில்லையோ அவர்களுக்காக உர்துவில் அதன் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு இருக்க வேண்டும். நிகழ்ச்சிகள் உர்துவிலும் அதன் மொழியாக்கம் ஜப்பானிய மொழியிலும் இருக்கக் கூடாது. இங்கு அதற்கு நேர் மாற்றமான நடைமுறை இருக்க வேண்டும். கூட்டங்கள் ஜப்பானிய மொழியில் நடத்தப்பட வேண்டும். அதன் மொழியாக்கம் உர்துவில் இருக்க வேண்டும். ஜப்பானிய அஹ்மதிகளை மிக அதிகமாக உங்களது நிகழ்ச்சிகளில் பங்கு பெறுபவர்களாக ஆக்குங்கள். இவர்களை சொற்பொழிவாற்ற வையுங்கள். அவர்களுக்கு ஜமாஅத்தின் அமைப்பை புரிய வையுங்கள். இவர்களை மற்ற தொண்டுகளையும் செய்ய வையுங்கள்.

நான் ஏற்கனவே கூறியிருந்தபடி இன்சா அல்லாஹ் உங்களது புதிய பள்ளிவாசல் இங்கு உருவாகி விடும். இதன் மூலமாக தப்லீகிற்கான மேலும் பல வழிகள் திறக்கும். இந்த வழிகளில் ஒவ்வொரு அஹ்மதியும் அதை கண்காணிக்கின்ற கண்காணிப்பாளராக நிற்க வேண்டியது வரும். அதன் மூலம் எவர் இந்த வழியில் செல்வதற்காக வந்தாலும் எவர் இவற்றை தேடுவதற்கு முயற்சி செய்தாலும் அங்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிந்துள்ள பழைய அஹ்மதிகள் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக இருக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியதற்கிணங்க நம்மில் ஒவ்வொருவருக்கும் இறைவனுடன் தொடர்பு நிலைபெறாத வரை இந்த பணியை நாம் செய்ய முடியாது. எந்த ஏக இறைவனின் பெயரால் இந்த பள்ளிவாசல் கட்டப்படுகிறதோ அந்த ஏக இறைவனை வணங்குவதற்கான உரிமையைச் செலுத்தாமல் இருந்தால், எவருடனும் எவ்வித உறவும் வைக்காத அந்த ஏக இறைவனின் தன்னிறைவு பற்றிய அறிவு ஒருவருக்கு இல்லாமல் இருந்தால் இந்தப் பணியை நாம் செய்ய முடியாது. தக்வாவிற்கேற்ப நடக்கின்றவர் தான் அவனது பார்வையில் கண்ணியத்திற்குரியவர் ஆவார். அவர் இறைவணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்துபவர் ஆவார். பொருத்தமான நற்செயல்களைச் செய்பவராக அவர் இருப்பார். இறைவனின் படைப்பினங்களுக்கு வழிகாட்டுபவராகவும் அவர்களை இறைவனுக்கு முன்பு குனிய வைப்பதற்கு முயற்சி செய்பவராக அவர் இருப்பார். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் எத்தகைய மூஃமினாக நடந்து கொள்பவர்களாக அவர்கள் இருப்பார் என்றால் رُحَمَآءُ بَيْنَهُمْ ***அவர்கள் தங்களுக்கிடையில் கருணையுடன் நடந்து கொள்வர் (48:30)*** என்பதன் உதாரணங்களாக அவர்கள் திகழ்வர்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இது பொறுப்பாளர்களின் பொறுப்பு மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக ஒவ்வொரு அஹ்மதி ஆண், பெண், இளைஞர், முதியவர் ஆகியோரது பொறுப்பாக இது இருக்கின்றது.

அவர்கள் பொறுப்பாளர்களின் தவறுகளை எடுத்துக் காட்டுவதில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக தம்மைத் தாமே அவர்கள் ஆய்வு செய்து பார்த்து தங்களைத் தாமே ஏக இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவர்களாக ஆக்க வேண்டும். ரஹ்மானாகிய இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தி ரஹ்மானின் அடியானாக ஆக வேண்டும். மேலும் இன்சா அல்லாஹ் உங்களுக்கு விரைவில் கிடைக்க இருக்கும் இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்குத் தயாராகுங்கள். உங்களது தியாகங்களுக்கு அல்லாஹ்வின் முன்பு அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். அது அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நீங்கள் செயல்படுவதன் மூலமாகவும் அவனது அருளாலும் தான் நடக்க முடியும். உங்களது முயற்சியால் அது நடக்காது. எனவே அதற்காக துஆ செய்ய வேண்டியது அவசியமானதாகும். அல்லாஹ்வின் அருளைக் கேட்பது அவசியமானதாகும். பணிவை மேற்கொள்வது அவசியமானதாகும். நான் ஏற்கனவே இந்த பள்ளிவாசல் தொடர்பாக சில விபரங்களைக் கூறுவேன் என்று கூறியிருந்தேன். என் முன்னால் உள்ள விபரங்களின் அடிப்படையில் நான் இதுபற்றி உங்களுக்கு இப்போது எடுத்துரைக்கின்றேன்.

1981 ஆம் ஆண்டு பழைய மிசன் ஹவுஸ் இங்கு வாங்கப்பட்டது. அதன் விபரங்களைக் கூற வேண்டிய தேவையில்லை. அது ஒரு சிறு வீடு ஆகும். மஸ்ஜிது பைத்துல் அஹதின் பரப்பளவு ஏறக்குறைய 3000 சதுர மீட்டராகும். இதில் 60 சதவீதம் பகுதி கூரையின் கீழ் கட்டிடமாக இருக்கின்றது. தொழுகைக்கான ஹால் இருக்கின்றத. இதில் 500 தொழுகையாளிகள் தொழ முடியும். தங்குவதற்கான குவாட்டர்ஸ் இருக்கின்றது. அறைகள் உள்ளன. இதற்காக ஆகும் செலவீனங்களையும் சேர்த்து ஏறக்குறைய 8 இலட்சம் டாலர் செலவு செய்து இதனை வாங்கியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் புதிய தலைமையகத்தை நீங்கள் வாங்க வேண்டும் என்று உங்களுக்கு கவனமூட்டப்பட்டதும் ஜப்பான் ஜமாஅத் நான் ஏற்கனவே கூறியது போன்று பொருள் தியாகங்களைச் செய்து அல்லாஹ்வின் அருளால் இந்த இடத்தை வாங்கியுள்ளார்கள். சிறிய ஜமாஅத்தாக இது இருந்தும் இந்த வகையில் இவர்கள் பெரும் தியாகத்தைச் செய்துள்ளனர். பல மக்களும் பெரும் பெரும் தொகையை இதற்காக செலுத்தியுள்ளனர். சிறுவர்கள் தங்களது பாக்கெட் மணியை இதற்காக செலுத்தியிருக்கின்றார்கள். பெண்கள் தங்கள் நகைகளைத் தந்துள்ளனர். சிலர் பாகிஸ்தானிலுள்ள தங்கள் வீடுகளை விற்று அதன் மூலம் கிடைத்த தொகையை இதற்காக கொடுத்துள்ளனர். அல்லது தங்களது சொத்தை விற்று இதற்காக தொகையை வழங்கியுள்ளனர். சிலர் தங்களது முன்னோர்களிடமிருந்து தங்களுக்கு கிடைத்த விலைமதிப்புள்ள தங்களுக்கு மிகவும் பிரியமான நகைகளை விற்று அந்த தொகையை பள்ளிவாசலுக்கு வழங்கியுள்ளனர்.

சுருக்கமாக, பொருள் தியாகத்தில் ஒருவர் மற்றவரை விட அதிகமாக தியாகம் செய்வதற்கு நீங்கள் முயற்சி செய்து தியாகங்களைச் செய்துள்ளீர்கள். அல்லாஹ் இந்த எல்லா பொருள் தியாகங்களையும் ஏற்றுக் கொள்வானாக! உங்களது செல்வங்களிலும் உயிர்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக! இப்போது பள்ளிவாசலின் ரிஜிஸ்ட்ரேஸன் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. முதலிலேயே இது நடந்திருந்தால் அங்கு ஜுமுஆ தொழுகை நடந்திருக்கும். ஆனால் விரைவில் அது நமக்கு இன்சா அலலாஹ் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எந்த ஜப்பானிய வழக்கறிஞர் தொடர்பாக நான் கூறினேனோ அவர் Fees வாங்கியிருந்தால் குறைந்தது 20,000 டாலர் கொடுக்க வேண்டியது வந்திருக்கும். இது அவரது பேருபகாரமாகும். அல்லாஹ் இதற்கான நற்கூலியை அவருக்கு வழங்குவானாக! பள்ளிவாசலுக்காக நீங்கள் இந்த முயற்சியை சில மாதங்களிலேயே செய்து முடித்துள்ளீர்கள். இந்த விபரங்களிலிருந்தும் பள்ளிவாசலுக்காக நமக்கு கிடைத்துள்ள இந்த இடத்தை வாங்குவதற்காக வழக்கத்திற்கு மாற்றமாக நீங்கள் செய்ய வேண்டிய தியாகங்களை நீங்கள் செய்துள்ளீர்கள். ஆனால் இந்த இடம் கிடைத்த அந்த வரலாற்றைப் பார்க்கும் போது நாம் இதைப் பற்றி சிந்திக்காமல் இருந்த சமயத்தில் அல்லாஹ் நமக்கு உதவி செய்தான். திடீரென்று இதற்கான ஏற்பாடு உடனடியாக நடந்தது. இதுவும் அல்லாஹ்வின் அருளாகும். இதில் உங்களது முயற்சியை விட இந்த இடம் கிடைத்தது அல்லாஹ்வின் அருள்களின் கனியாக இருக்கின்றது. இதனால் இவ்வளவு விரிவான இடம் உங்களுக்கு கிடைத்து விட்டது. இது எத்தகைய இடமாக இருக்கின்றது என்றால் சில மாதங்களுக்கு முன்னால் உங்களில் சிலர் இத்தகைய இடம் கிடைப்பது பற்றி கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள். இந்த விசயங்கள் நம்மை இறைவன் முன் குனிய வைக்கக் கூடியவையாக இருக்க வேண்டும்.

ஆனால் இத்துடன் நான் இதையும் கூற விரும்புகின்றேன். உலகில் ஒவ்வொரு இடத்திலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பொழிகின்ற இந்த அருள்கள் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் உரத்த குரலில் செய்திருந்த அந்த வாதங்களுக்கு எதிரில் இறைவன் புறமிருந்து கிடைத்துள்ள பதிலாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு சாதகமாக அல்லாஹ்வின் அருள்கள் மற்றும் அவனது உதவிகள் உள்ளன என்பதற்கான செயல் அளவிலான வெளிப்பாடாக இது இருக்கின்றது. இந்த வாதங்களை எதிரிகள் இரண்டாவது கலீஃபாவின் கிலாஃபத் காலகட்டத்தில் செய்திருந்தனர்.

அதாவது நாங்கள் காதியானிலுள்ள ஒவ்வொரு செங்கலையும் அங்கிருந்து அகற்றி விடுவோம். அஹ்மதிய்யத்தை நாங்கள் அழித்து விடுவோம் (நவூதுபில்லாஹ்) என்பதே எதிரிகளின் வாதமாக இருந்தது. அந்த சமயத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்திற்கான அடித்தளத்தை நிறுவினார்கள். மேலும் இதற்கு நாம் கூறும் பதில் தப்லீக் செய்வதும் உலகில் நாம் பரவிவிடுவதும் ஆகும் என்று அவர்கள் கூறியிருந்தார்கள். இதைக் கேட்டு ஜமாஅத் சகோதரர்கள் அப்போது பொருள் தியாகங்களைச் செய்தனர். உலகில் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியும் பரவ ஆரம்பித்தது. முபல்லிக்குகள் வெளிநாட்டிற்குச் சென்றனர். பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. மனித இனத்திற்காக தொண்டு செய்யும் மற்ற பணிகளும் நடக்க ஆரம்பித்தன. மருத்துவமனைகளும், பள்ளிக் கூடங்களும் கட்டப்பட்டது. காதியானின் ஒவ்வொரு செங்கலையும அங்கிருந்து அகற்றி விடுவோம் என்று கூறியவர்களது பெயரும் அடையாளமும் கூட இப்போது எஞ்சியிருக்கின்றதா என்பது நமக்கு தெரியவில்லை.

ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் இன்று உலகில் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் பள்ளிவாசல்களும் கட்டப்படுகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தின் மூலமாக இஸ்லாத்தில் இணைந்துள்ளனர். இந்த வருடம் அல்லாஹ் உங்களுக்கு அதாவது ஜப்பான் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு பள்ளிவாசலின் வடிவத்தில் ஒரு அருட்கொடையை வழங்கியுள்ளான். அது உடனடியாக கிடைப்பதற்கு எந்த சாத்தியக்கூறும் இருக்கவில்லை. இதைப் பற்றி நான் கூறி விட்டேன். எனவே நமது தலை அல்லாஹ்வின் இந்த அருளைப் பார்த்து அவன் முன்னால் குனிந்து கொண்டே இருக்க வேண்டும். இதற்கான உண்மையான உரிமையைச் செலுத்துவது என்பது நம்மிடத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துவதேயாகும். அது இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தஹ்ரீகே ஜதீது திட்டத்துடன் தொடர்புள்ள அல்லாஹ்வின் இந்த அருள்களை நாம் வெளிப்படுத்திக் கூறுவதையும் நாம் செய்ய வேண்டும். இதனை இன்னொரு விதத்திலும் வெளிப்படுத்திக் கூற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. அல்லாஹ்வின் அருள்களை எடுத்துக் கூறுவதும் அவசியமானதாகும். தற்செயலாக தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடம் எனது இந்த சுற்றுப்பயணத்தின் சமயத்தில் ஆரம்பமாகியுள்ளது. அல்லது இவ்வாறும் கூறலாம். ஆஸ்திரேலியா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் தஹ்ரீகே ஜதீதின் கடந்த வருடம் முடிந்து விட்டது. அதில் நாம் அல்லாஹ்வின் அருள்களின் எண்ணற்ற காட்சிகளைக் கண்டோம். இந்த சுற்றுப் பயணத்தின் போதும் அந்தக் காட்சிகளை நாம் பார்த்தோம். நிச்சயமாக அவை நமது முயற்சிகளின் விளைவு அல்ல. இது தொடர்பான விபரங்களை வேறொரு சமயத்தில் எடுத்துக் கூறுவேன்.

இப்போது நான் ஏற்கனவே கூறியது போன்றே தஹ்ரீகே ஜதீதின் கடந்த வருடம் முடிந்து விட்டது. எனவே புதிய வருடத்தை துவக்குவதன் அறிவிப்பை எனது இந்த சுற்றுப் பயணத்தின் போது ஜப்பானில் வைத்து நான் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இப்போது நான் நமது வழக்கமான மரபிற்கேற்ப இது தொடர்பான சுருக்கமான விபரங்களை உங்கள் முன்னால் வைக்கின்றேன். அதன் மூலம் தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடம் அதாவது இந்த திட்டத்தின் 80வது வருடம் ஆரம்பமாகிறது என்ற அறிவிப்பைச் செய்கின்றேன். பல அறிக்கைகளும் வராமலும் இருக்கின்றது. நமக்கு கிடைத்த அறிக்கைகளுக்கேற்ப இந்த வருடம் தஹ்ரீகே ஜதீதில் ஜமாஅத்திற்கு 78 இலட்சத்தி 69 ஆயிரத்தி 100 பவுண்டுகள் பொருள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. இது கடந்த வருடத்தை விட ஏறக்குறைய ஆறரை இலட்சம் பவுண்டுகள் அதிகமாகும். அதிகரிப்பு அதிகமாக இருந்திருக்கலாம். ஏனென்றால் உள்ளூர் கரன்ஸியில் மிகவும் அதிகமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் பவுண்டின் விலைக்கு எதிரில் பல நாடுகளின் கரன்ஸியின் விலையில் குறைவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வெளிப்படையாக பார்க்கும் போது இது குறைவாகத் தெரியலாம். ஆனால் நாடுகளின் அளவில் பார்க்கும் போது இதில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு இருந்து வரும் தரம் (Position) அப்படியே இருக்கின்றது. அதற்குப் பிறகு தரத்தின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு வெளியே உள்ள நாடுகளில் முதலிடத்தில் ஜெர்மனி உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் முறையே அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, இந்தியா, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, பிறகு அரபு நாட்டிலுள்ள இரண்டு ஜமாஅத்துகள், பிறகு கானா, சுவிரட்சர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

ஜெர்மனி அல்லாஹ்வின் அருளால் பெரிதாக குதித்து முன்னேறியுள்ளது. இவர்கள் தஹ்ரீகே ஜதீதில் மூன்றரை இலட்சம் யூரோவை அதிகரிக்கச் செய்துள்ளனர். அமெரிக்காவை விட ஏறக்குறைய 1 இலட்சத்தி 82 ஆயிரம் பவுண்டுகள் இவர்கள் அதிகமாக வசூல் செய்துள்ளனர். அமெரிக்காக இங்கிலாந்தை விட 75,000 பவுண்டுகளை அதிகமாக வசூல் செய்துள்ளது. இங்கிலாந்து கனடாவை விட 4 இலட்சம் பவுண்டுகள் அதிகமாக வசூல் செய்துள்ளது. ஜெர்மனியின் சந்தாக்களில் எப்போது அதிகரிப்பு ஏற்பட்டாலும் எனக்கு எப்போதும் ஜெர்மனியின் அமீர் சாஹிப் மற்றும் அதன் செயற்குழுவின் இந்த கவலையை வெளிப்படுத்தும் சொற்கள் எப்போதும் எனக்கு முன்னால் வந்து விடுகின்றது.

எங்கு அஹ்மதிகள் ஹராமான தொழில் நடக்கும் இடங்களில் பணிபுரிகின்றனரோ உதாரணமாக, மது மற்றும் பன்றி இறைச்சி விற்கப்படும் இடங்களில் பணிபுரிவோர் உள்ளனரோ அவர்களிடமிருந்து சந்தா வாங்கக் கூடாது என்று கூறி நான் அதற்கு தடை விதித்திருந்தேன். இதனால் நமது சந்தாக்களில் குறைவு ஏற்பட்டு விடும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. முதல் வருடத்திலேயே இவர்கள் தங்களது கவலையை வெளிப்படுத்திய சமயத்தில் அவர்களது சந்தாக்களில் பல இலட்சம் ரூபாய்கள் அதிகரித்தது. எந்தக் குறைவும் ஏற்படவில்லை. இந்த வருடம் தஹ்ரீகே ஜதீதில் மட்டும் இவர்கள் மூன்றரை இலட்சம் யூரோ மேலும் அதிகமாகக் கொடுத்துள்ளனர். அல்லாஹ் இவர்களது செல்வங்களிலும் உயிர்களிலும் பரக்கத்தை ஏற்படுத்துவானாக!

தனி நபர் விகிதாச்சாரப்படி சந்தா கொடுப்பதில் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கின்றது. பிறகு சுவிட்சர்லாந்து உள்ளது. பின்பு ஆஸ்திரேலியா உள்ளது. பிறகு ஜப்பான் உள்ளது. தனி நபர் விகிதாச்சாரப்படி சந்தா கொடுப்பதில் ஜப்பான் நான்காவது இடத்தில் உள்ளது. எப்படியோ எங்காவது ஓரிடத்தில் இவர்களும் வந்து விட்டனர். பிறகு இதற்கு அடுத்த படியாக, இங்கிலாந்து, ஜெர்மனி, நார்வே, ஃபிரான்ஸ், பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகள் உள்ளன.

உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் எல்லாரையும் விட அதிகமாக கானாவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பிறகு ஜெர்மனி, அதற்கு அடுத்து ஆஸ்திரேலியா, பிறகு பாகிஸ்தானிலும், பிறகு இங்கிலாந்து, கானா, இந்தியா, அமெரிக்காவிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறியிருந்தேன். இந்த வகையில் இரண்டே கால் இலட்சம் பேர் புதிதாக சந்தா கொடுப்பவர்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர். அல்லாஹ்வின் அருளால் மொத்த எண்ணிக்கை 11 இலட்சத்தி 34 ஆயிரத்தையும் கடந்து நிற்கின்றது.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் கானா முதலிடத்தில் உள்ளது. பிறகு அடுத்த இடங்களில் முறையே நைஜீரியா, மொரீஸியஸ், புர்கினோஃபாஸோ, தன்ஸானியா, கேம்பியா, பெனின், கென்யா, செராலியோன் மற்றும் உகாண்டா ஆகிய நாடுகள் உள்ளன. புதிதாக சந்தா கொடுக்க வைப்பவர்களைச் சேர்ப்பதில் எல்லாரையும் விட அதிகமான முயற்சியை செராலியோன் செய்துள்ளது. அதற்கு அடுத்த இடங்களில் மாலி, புர்கினோஃபாஸோ, கேம்பியா, பெனின், செனகல், லைபீரியா, உகாண்டா, தன்ஸானியா ஆகிய நாடுகள் உள்ளன.

தஃப்தர் அவ்வல் அதாவது முதல் பதிவேட்டில் உள்ள முஜாஹிதீன்களின் 1261 பேர் உயிருடன் இருக்கும் வகையில் அவர்களது ரிஜிஸ்டர் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தான், தஹ்ரீகே ஜதீதின் பொருள் தியாகத்தில் முதல் மூன்று இடங்களில் இருக்கும் பெரிய ஜமாஅத்துகளில் முதலிடத்தில் லாஹூரும், இரண்டாவது இடத்தில் ரப்வாவும், மூன்றாவது இடத்தில் கராச்சியும் இருக்கின்றது. இது தவிர அடுத்த பத்து இடங்களில் வரும் பெரிய ஜமாஅத்துகளில் இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, முல்தான், குவாயாத்தா, சேக்பூரா, பெசாவர், பாவல்நகர், ஹைதராபாத், உக்கடா, நவாப்சா ஆகியவையாகும். பொருள் தியாகங்களைச் செய்யும் மாவட்டங்களில் முதலிடத்தில் சியால்கோட், இரண்டாமிடத்தில் சர்கோடா, மூன்றாவது இடத்தில் உமர்கட், பிறகு குஜ்ரான்வாலா, குஜ்ரத்தாத், பத்ஹீன், நோலாரோவால், சங்கோ, மல்கானா சாஹிப், ரஹீம் யார்கான், அத்தவோட்டா சிங் ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

*(தொடர்ந்து ஹுஸூர் அவர்கள், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளின் ஜமாஅத் அடிப்படையில் முதல் 10 இடங்களையும், வசூலின் அடிப்படையில் முதல் 10 இடங்களையும் பெற்ற ஜமாஅத்துகளைக் குறிப்பிடுகின்றார்கள்.)*

இந்தியாவில் முன்னணியில் உள்ள 10 ஜமாஅத்துகள் பின்வருமாறு:

1) கருலாயி – கேரளா
2) காலிகட் – கேரளா
3) ஹைதராபாத் – ஆந்திர பிரதேசம்
4) கன்னூர் டவுண் – கேரளா
5) பியான்கடி – கேரளா
6) காதியான் – பஞ்சாப்
7) கொல்கத்தா – பெங்காள்
8) யாத்கீர் – கர்நாடகா
9) சென்னை – தமிழ்நாடு
10) மாதா டவுண் – கேரளா

கேரளாவிலுள்ள ஜமாஅத்துகள் மிகவும் ஆக்டிவ் ஆக இருக்கின்றது மாசா அல்லாஹ்.

இந்தியாவில் முதல் 10 இடங்களிலுள்ள மாநிலங்களில்,

1) கேரளா
2) ஆந்திரபிரதேசம்
3) ஜம்மு காஷ்மீர்
4) கர்நாடகம்
5) பெங்காள்
6) ஒரிஸ்ஸா
7) பஞ்சாப்
8) உத்திர பிரதேசம்
9) மகாராஷ்டிரா
10) தில்லி

ஆகியவை உள்ளன.

இந்த வருடமும் அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்காவில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வழக்கத்திற்கு மாற்றமாக செய்யப்பட்டுள்ள பொருள் தியாகங்கள் தொடர்பான சம்பவங்கள் வந்துள்ளன. அவற்றின் விபரங்களை எடுத்துக் கூறுவதற்கு நேரமில்லை. எவ்வாறிருப்பினும் ஏதாவதொரு சமயத்தில் அவை கூறப்படும் இன்சா அல்லாஹ்.

இந்த வருடம் கபாபீர் ஜமாஅத்திலிருந்து, ஜப்பானிலிருந்து தஹ்ரீகே ஜதீதிற்காக அறிவிப்பு செய்யப்படும் போது எங்களது ஜமாஅத் கடந்த வருடத்திற்கு எதிரில் தங்களது தியாகத்தை மேலும் அதிகமாக எடுத்து வைத்துள்ளது என்று எழுதியுள்ளனர். கபாபீர், அரபு நாடுகளில் எல்லாவற்றையும் விட பெரிய ஜமாஅத் ஆகும். இவர்களது தங்களது தியாகத்தை இரு மடங்காக ஆக்கியுள்ளனர். ஏறக்குறைய 20,000 பவுண்டு அதிகமாக வழங்கியுள்ளனர். அல்லாஹ் எவ்வகையிலாவது தியாகம் செய்பவர்கள் மற்றும் தஹ்ரீகே ஜதீதிற்காக பொருள் தியாகம் செய்திருக்கின்ற அனைவருடைய செல்வங்களிலும் பொருள்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக! ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அவர்கள் முன்னேறும்படி செய்வானாக! இந்த தியாகங்கள் முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக செய்தவையாக இருக்கட்டுமாக! மேலும் அல்லாஹ் அத்தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at NAGOYA, JAPAN

on **08.11.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456